# பிற்சேர்க்கை 3

# "கிறிஸ்துவுக்குள்" என்ற சொற்றொடர்

*"கிறிஸ்துவானவர், மீட்கப்பட்ட மனிதரின் புதிய சூழ்நிலையாக உள்ளார். அம்மனிதர் தமது பூமிக்குரிய பங்கான இறுக்கமான கட்டுப்பாடுகளில் இருந்து வெளியே தூக்கியெடுக்கப்பட்டு, முற்றிலும் மாறுபட்ட வட்டமாகிய கிறிஸ்துவின் வட்டத்திற்கு உயர்த்தப்படுகின்றார். அவர் ஒரு புதிய மண்ணில், புதிய தட்ப வெட்ப நிலையில் இடம் மாற்றி நடப்பட்டுள்ளார், மற்றும் அந்த மண்ணாகவும் தட்பவெப்ப நிலையாகவும் இருப்பவர் கிறிஸ்துவே. அவருடைய ஆவியானது மாண்புமிக்க ஒன்றைச் சுவாசிக்கின்றது. அவர் மிக மேன்மையான தளம் ஒன்றில் சஞ்சரிக்கின்றார்."* [1]

புதிய ஏற்பாட்டில் உள்ள "கிறிஸ்துவுக்குள்" என்ற அல்லது அதற்குச் சமமான சொற்றொடர்களைப் பற்றிய ஒரு கவனம் நிறைந்த ஆய்வின்றி, சபையைப் பற்றிய படிப்பானது நிறைவடைவதில்லை. இச்சொற்றொடரானது (1 தெச. 4:14 எண்ணப்படாதிருந்தால்) நெஸ்லேயின் கிரேக்கப் புதிய ஏற்பாட்டில் 119 முறைகள் காணப்படுகின்றன. பவுலின் எழுத்துக்களில் இது அடிப்படையாகக் காணப்படுகின்றது, ஆனால் இது 1 பேதுரு (3:16; 5:10; 5:14), 1 யோவான் (2:27, 28; 3:24; 4:13; 5:11, 20), மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் (14:13) ஆகியவற்றிலும் காணப்படுகின்றது.

புதிய ஏற்பாட்டில் இச்சொற்றொடரானது மாறுபட்ட வடிவங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது, குறிப்பாகப் பின்வரும் சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன: "கிறிஸ்துவுக்குள்," "கிறிஸ்து இயேசுவுக்குள்," "நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள்," கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்,'' ''கர்த்தராகிய இயேசுவுக்குள்,'' ''கர்த்தருக்குள்,'' "இயேசுவுக்குள்," "அவரில்," "அவருக்குள்," "அவரின் மேல்," "அவருடைய குமாரனுக்குள்,'' மற்றும் ''அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்குள்.'' ''கிறிஸ்துவுக்குள்'' இருத்தல் என்ற கருத்தானது

“கிறிஸ்துவினுடைய சரீரம்,” “கிறிஸ்துவின் சரீரம்,” “அவருடைய சரீரம்,” “சரீரம்” மற்றும் “ஒரே சரீரம்” என்பதற்கான குறிப்புகளிலும் பிரதிபலிக்கப் படுகின்றது, இச்சொற்றொடர்கள் புதிய ஏற்பாட்டில் பதினாறு முறைகள் காணப்படுகின்றன. “கிறிஸ்துவுக்குள்” என்ற சொற்றொடரானது நான்கு சுவிசேஷங்களில் காணப்படுவதில்லை; இருப்பினும் இதன் முன்னிழலானது யோவா. 15:5ல் ‘‘என்னில்’’ என்ற சொற்றொடரில் ஒருமுறை காணப் படுகின்றது.

கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தில் இருப்பதைக் குறிப்பிடும் புதிய ஏற்பாட்டு வசனங்களை மட்டும் உள்ளடக்கிய அட்டவணை ஒன்றை அளிப்பதே இப்படிப்பின் நோக்கமாக உள்ளது. “அவருக்குள்” அல்லது ‘‘அவரில்’’ விசுவாசம் கொள்ளுதல் பற்றிய சொற்றொடரானது சுவிசேஷங்களில் பல முறைகள் காணப்படுகின்றது, ஆனால் இந்தச் சொற்றொடர்கள் இப்பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை. அந்தச் சொற்றொடர்கள் ஒரு தனியான படிப்பில் அடங்க வேண்டும் என்று நம்பப்படுகின்றது. அப். 17:28ல் உள்ளது போன்ற “தேவனுக்குள்” அல்லது இதை ஒத்துள்ள சொற்றொடர்களும் கூட இந்த அட்டவணையில் உள்ளடங்குவதில்லை.

‘‘கிறிஸ்துவுக்குள்’’ என்ற பதமானது விளக்கத்தின்படி, அதன் பல்வேறுபட்ட வடிவங்களில், கிறிஸ்துவுடனான ஐக்கியத்தின் வட்டாரத்தை, “சபை” (எபே. 1:21, 22) என்ற சொற்றொடரினாலும் மற்றும் ‘‘கிறிஸ்துவின் சரீரம்’’ (எபே. 4:12) என்ற சொற்றொடரினாலும் சூழப்பட்டதும், மீட்கப்பட்டவர்களுக்கு ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங் களை வழங்கும் இடமானதுமான வட்டாரத்தைக் குறிக்கின்றது.

சுலபமாய்ப் புரிந்து கொள்ளும் வகையில் மாறுபட்ட எழுத்து வடிவில் தரப்பட்டுள்ள இச்சொற்றொடரின் வித்தியாசப்பட்ட வடிவங்களைக் கவனமாய்ப் படியுங்கள். நீங்கள் இவைகளைப் படிக்கையில், “கிறிஸ்துவுக்குள்’’ கிறிஸ்தவர்களின் நிலை மற்றும் நிபந்தனையையும், “அவருக்குள்’’ மகிழ்வுடன் அனுபவிக்கப்படுகின்ற ஆவிக்குரிய பெரும் சிறப்பான ஆசீர்வாதங்களையும் கவனியுங்கள்.

இந்த அட்டவணையை முறைப்படுத்துவதற்கு வேத வசனத்தின் O.V. மொழிபெயர்ப்பானது மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

## “என்னில்” (1)

யோவான் 15:5

“நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் *என்னிலும்* நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.”

## “கிறிஸ்துவுக்குள்” (30)

ரோமர் 9:2

‘‘நான் சொல்லுகிறது பொய்யல்ல, *கிறிஸ்துவுக்குள்* உண்மையைச்

*சொல்லுகிறேன் என்று பரிசுத்த ஆவிக்குள் என் மனச்சாட்சியும் எனக்குச் சாட்சியாயிருக்கிறது."*

*ரோமர் 12:5*
*"அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக் கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்."*

*ரோமர் 16:7*
*"அப்போஸ்தலருக்குள் பெயர் பெற்றவர்களும், எனக்கு முந்திக் கிறிஸ்துவுக் குள்ளானவர்களும், என் இனத்தாரும், என்னுடனே கூடக் காவலில் கட்டுண்டவர்களுமாயிருக்கிற அன்றோனீக்கையும் யூனியாவையும் வாழ்த்துங்கள்."*

*ரோமர் 16:9*
*"கிறிஸ்துவுக்குள் நம்மோடே உடன் வேலையாளாகிய உர்பானையும், என் பிரியமான ஸ்தாக்கியையும் வாழ்த்துங்கள்."*

*ரோமர் 16:10*
*"கிறிஸ்துவுக்குள் உத்தமனாகிய அப்பெல்லேயை வாழ்த்துங்கள். அரிஸ்தொபூலுவின் வீட்டாரை வாழ்த்துங்கள்."*

*1 கொரி. 3:1*
*"மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேச வேண்டியதாயிற்று."*

*1 கொரி. 4:10*
*"நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரர், நீங்கள் கிறிஸ்துவில் புத்திசாலிகள்; நாங்கள் பலவீனர், நீங்கள் பலவான்கள்; நீங்கள் கனவான் கள், நாங்கள் கனவீனர்."*

*1 கொரி. 4:15*
*"கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே: கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன்."*

*1 கொரி. 4:17*
*"இதினிமித்தமாக, எனக்குப் பிரியமும் கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன்; நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்து வருகிற பிரகாரம் கிறிஸ்துவுக் குள்ளான என் நடக்கைகளை அவன் உங்களுக்கு ஞாபகப்படுத்துவான்."*

*1 கொரி. 15:17, 18*
*"கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும், நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரை யடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே."*

*1 கொரி. 15:19*
*"இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களா யிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர் களாயிருப்போம்."*

*2 கொரி. 1:21*
*"உங்களோடேகூட எங்களையும் கிறிஸ்துவுக்குள்[2] ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே."*

*2 கொரி. 2:17*
*"அநேகரைப்போல, நாங்கள் தேவ வசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவ சந்நிதியில் பேசுகிறோம்."*

*2 கொரி. 3:14*
*"அவர்களுடைய மனது கடினப்பட்டது; இந்நாள் வரைக்கும் பழைய ஏற்பாடு வாசிக்கப்படுகையில், அந்த முக்காடு நீங்காமலிருக்கிறது; அது கிறிஸ்துவினாலே நீக்கப்படுகிறது."*

*2 கொரி. 5:17*
*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியா யிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின."*

*2 கொரி. 5:19*
*"அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்."*

*2 கொரி. 12:2*
*"கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன்; அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டான்; அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார்."*

*2 கொரி. 12:19*
*"நாங்கள் யோக்கியர்களென்று விளங்கும்படி உங்களிடத்தில் பேசுகிறோ மென்று எண்ணுகிறீர்களோ? தேவனுக்கு முன்பாகக் கிறிஸ்துவுக்குள்*

*பேசுகிறோம். பிரியமானவர்களே, சகலத்தையும் உங்கள் பக்தி விருத்திக்காகச் செய்கிறோம்."*

*கலா. 1:22*

*"மேலும் யூதேயா தேசத்திலே கிறிஸ்துவுக்குள்ளான சபைகளுக்கு முகமறியாதவனாயிருந்தேன்."*

*கலா. 2:17*

*"கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாக்கப்படும்படி நாடுகிற நாமும் பாவிகளாகக் காணப்படுவோமானால், கிறிஸ்து பாவத்திற்குக் காரணரோ? அல்லவே."*

*எபே. 1:3*

*"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்."*

*எபே. 4:32*

*"ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்."*

*பிலி. 2:1, 2*

*"ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், ... உண்டானால், நீங்கள் ஏக சிந்தையும், ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்."*

*கொலோ. 1:2*

*"கொலோசே பட்டணத்தில் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர்களுக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் ... உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக."*

*கொலோ. 1:28*

*"எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்."*

*1 தெச. 4:16*

*"ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்."*

*பிலே. வச. 20*
*"ஆம் சகோதரனே, கர்த்தருக்குள் உம்மாலே எனக்குப் பிரயோஜன முண்டாகட்டும்; கர்த்தருக்குள் என் உள்ளத்தை இளைப்பாறப்பண்ணும்."*

*1 பேது. 3:16*
*"கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல்மனச் சாட்சியுடையவர்களாயிருங்கள்."*

*1 பேது. 5:10*
*"கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவரா யிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச்சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலைநிறுத்துவாராக."*

*1 பேது. 5:14*
*"ஒருவரையொருவர் அன்பின் முத்தத்தோடே வாழ்த்துதல் செய்யுங்கள். கிறிஸ்து இயேசுவுக்குள்ளான உங்கள் அனைவருக்கும் சமாதான முண்டாவதாக."*

## "கிறிஸ்துவுக்குள்" *(5)*[3]

*1 கொரி. 15:22*
*"ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்."*

*2 கொரி. 2:14*
*"கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப் பண்ணி, எல்லா இடங்களிலேயும், எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்."*

*எபே. 1:9, 10*
*"காலங்கள் நிறைவேறும்போது, … சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று, தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்."*

*எபே. 1:11, 12*
*"மேலும் கிறிஸ்துவின் மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு, தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம்."*

*எபே. 1:19, 20, 21*
“தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, *அவரிடத்தில்* நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே ... அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து ...”

## “கிறிஸ்து இயேசுவுக்குள்” *(42)*

*ரோமர் 3:23, 24*
“எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே *கிறிஸ்து இயேசுவிலுள்ள* மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.”

*ரோமர் 6:11*
“அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்துக்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு *கிறிஸ்துவுக்குள்* தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்.”

*ரோமர் 6:23*
“பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு *கிறிஸ்துவினால்* உண்டான நித்திய ஜீவன்.”

*ரோமர் 8:1*
“ஆனபடியால், *கிறிஸ்து இயேசுவுக்குட்*பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின் படி நடவாமல், ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை.”

*ரோமர் 8:2*
“*கிறிஸ்து இயேசுவினாலே* ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.”

*ரோமர் 15:17*
“ஆதலால் நான் தேவனுக்குரியவைகளைக் குறித்து இயேசு *கிறிஸ்துவைக்* கொண்டு மேன்மை பாராட்ட எனக்கு இடமுண்டு.”

*ரோமர் 16:3*
“*கிறிஸ்து இயேசுவுக்குள்* என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளை யும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள்.”

*1 கொரி. 1:2*
“கொரிந்துவிலே *கிறிஸ்து இயேசுவுக்குள்* பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனு டைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற

*நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுது கொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது."*

*1 கொரி. 1:5, 6*
*"நீங்கள் இயேசு கிறிஸ்துவுக்குள்ளாய் … அவர் மூலமாய் உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவ கிருபைக்காக, நான் உங்களைக் குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்."*

*1 கொரி. 1:30, 31*
*"அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள் … அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்."*

*1 கொரி. 4:15*
*"கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன்."*

*1 கொரி. 16:24*
*"கிறிஸ்து இயேசுவுக்குள்ளான என்னுடைய அன்பு உங்களெல்லாரோடுங் கூட இருப்பதாக. ஆமென்."*

*கலா. 2:4*
*"கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு உண்டான சுயாதீனத்தை உளவு பார்த்து, நம்மை நியாயப்பிரமாணத்திற்கு அடிமைகளாக்கும் பொருட்டாகப் பக்கவழியாய் நுழைந்த கள்ள சகோதரர் நிமித்தம் அப்படியாயிற்று."*

*கலா. 3:13, 14*
*"… கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும் …"*

*கலா. 3:28*
*"யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும், சுயாதீன னென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்."*

*கலா. 5:6*
*"கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமை யும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்."*

*எபே. 1:1*

*"தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தல னாகிய பவுல், எபேசுவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது."*

*எபே. 2:4- 7*

*"தேவனோ ... நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; ... கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்."*

*எபே. 2:10*

*"ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்."*

*எபே. 2:13*

*"முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்."*

*எபே. 3:3*

*"... புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளுமாயிருக்கிறார்களென்ற ..."*

*எபே. 3:9*

*"தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் [4] கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே."*

*எபே. 3:21*

*"சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்."*

*பிலி. 1:1*

*"இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரராகிய பவுலும் தீமோத்தேயுவும், பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக் கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது."*

*பிலி. 1:25*

*"இந்த நிச்சயத்தைக் கொண்டிருந்து, நான் மறுபடியும் உங்களிடத்தில்*

*வருகிறதினால் என்னைக் குறித்து உங்களுடைய மகிழ்ச்சி கிறிஸ்து இயேசுவுக்குள் பெருகும்படிக்கு."*

*பிலி. 3:3*
*"ஏனெனில், மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்."*

*பிலி. 3:14*
*"கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்."*

*பிலி. 4:7*
*"அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்."*

*பிலி. 4:19*
*"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்."*

*பிலி. 4:21*
*"கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் யாவருக்கும் வாழ்த்துதல் சொல்லுங்கள். என்னோடிருக்கிற சகோதரர்கள் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்."*

*1 தெச. 2:14*
*"எப்படியெனில் சகோதரரே, யூதேயா தேசத்தில் கிறிஸ்து இயேசுவுக் குள்ளான தேவனுடைய சபைகளை நீங்கள் பின்பற்றினவர்களாகி, அவர்கள் யூதராலே எப்படிப் பாடுபட்டார்களோ, அப்படியே நீங்களும் உங்கள் சுய ஜனங்களாலே பாடுபட்டீர்கள்."*

*1 தெச. 5:18*
*"எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமா யிருக்கிறது."*

*1 தீமோ. 1:14*
*"நம்முடைய கர்த்தரின் கிருபை கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தோடும் அன்போடுங்கூட என்னிடத்தில் பரிபூரணமாய்ப் பெருகிற்று."*

*2 தீமோ. 1:1*
*“கிறிஸ்து இயேசுவினால் உண்டாயிருக்கிற ஜீவனைப்பற்றிய வாக்குத் தத்தத்தின்படி, தேவனுடைய சித்தத்தினாலே, இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாயிருக்கிற பவுல்.”*

*2 தீமோ. 1:9*
*“அவர் [தேவன்] நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்.”*

*2 தீமோ. 1:13*
*“நீ கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தோடும், அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு.”*

*2 தீமோ. 2:1*
*“ஆதலால், என் குமாரனே, நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு.”*

*2 தீமோ. 2:10*
*“ஆகையால், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக்கொள்ளும்படி, சகலத்தையும் அவர்கள் நிமித்தமாகச் சகிக்கிறேன்.”*

*2 தீமோ. 3:12*
*“அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.”*

*2 தீமோ. 3:15*
*“கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக் கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்.”*

*பிலே. வச. 23, 24*
*“கிறிஸ்து இயேசுவினிமித்தம் என்னோடேகூடக் காவலில் வைக்கப் பட்டிருக்கிற எப்பாப்பிராவும் ... உமக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.”*

## *“நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவில்” (1)*

*ரோமர் 8:39*
*“உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும்,*

*நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்."*

## "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்" *(3)*

*1 தெச. 1:1*

"பவுலும், சில்வானும், தீமோத்தேயும், பிதாவாகிய தேவனுக்குள்ளும், *கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளும்,* இருக்கிற தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக."

*2 தெச. 1:1*

"பவுலும், சில்வானும், தீமோத்தேயும் நம்முடைய பிதாவாகிய தேவனுக்குள்ளும், *கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளும்* இருக்கிற தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதுகிறதாவது."

*2 தெச. 3:12*

"இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று, நம்முடைய *கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே* அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்திசொல்லுகிறோம்."

## "கர்த்தராகிய இயேசுவுக்குள்" *(1)*

*ரோமர் 14:14*

"ஒரு பொருளும் தன்னிலே தீட்டுள்ளதல்லவென்று *கர்த்தராகிய இயேசுவுக்குள்* அறிந்து நிச்சயித்திருக்கிறேன்; ஒரு பொருளைத் தீட்டுள்ளதென்று எண்ணிக் கொள்ளுகிறவனெவனோ, அவனுக்கு அது தீட்டுள்ளதாயிருக்கும்."

## "கர்த்தருக்குள்" *(3)*

*1 கொரி. 4:17*

"இதினிமித்தமாக, எனக்குப் பிரியமும், *கர்த்தருக்குள்* உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன்; நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்து வருகிற பிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை அவன் உங்களுக்கு ஞாபகப்படுத்துவான்."

*2 கொரி. 2:12*

"மேலும் நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி துரோவா பட்டணத்தில் வந்தபோது, *கர்த்தராலே* எனக்குக் கதவு திறக்கப் பட்டிருக்கையில், ..."

*வெளி. 14:13*

*"பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரியாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று."*

## *"இயேசுவில்" (2)*

*எபே. 4:20, 21*

*"நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை. இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே."*

*1 தெச. 4:14*

*"இயேசுவானவர் மரித்துப் பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோம்; அப்படியே இயேசுவுக்குள்[5] நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டு வருவார்."*

## *"அவருக்குள்" (20)*

*2 கொரி. 1:19*

*"என்னாலும் சில்வானுவினாலும், தீமோத்தேயுவினாலும், உங்களுக்குள்ளே பிரசங்கிக்கப்பட்ட தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் ஆம் என்றும் அல்ல என்றும் இராமல், ஆம் என்றே இருக்கிறார்."*

*2 கொரி. 1:20*

*"எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே."*

*2 கொரி. 5:21*

*"நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்."*

*2 கொரி. 13:4*

*"ஏனெனில் அவர் பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார்; அப்படி நாங்களும் அவருக்குள் பலவீனராயிருந்தும், உங்களிடமாய் விளங்கிய தேவனுடைய வல்லமையினால் அவருடனேகூடப் பிழைத்திருப்போம்."*

*எபே. 1:4*
*"... அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் (அவருக்குள்) நம்மைத் தெரிந்துகொண்டபடியே."*

*எபே. 1:10*
*"தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்."*

*எபே. 4:20, 21*
*"நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை. இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே."*

*பிலி. 3:8, 9, 11*
*"அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும் படிக்கும் ... கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும், ... அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்."*

*கொலோ. 1:17*
*"அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது."*

*கொலோ. 1:19, 20*
*"சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், ... அவருக்கு (பிதாவுக்கு)ப் பிரியமாயிற்று."*

*கொலோ. 2:6, 7*
*"ஆகையால், நீங்கள் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர் களாகவும், அவருக்குள் நடந்து கொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதில் பெருகுவீர்களாக."*

*கொலோ. 2:9*
*"ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது."*

*கொலோ. 2:10*
*"மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்."*

*2 தெச. 1:11, 12*

*“ஆகையால், நம்முடைய தேவனும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அளிக்கும் கிருபையின்படியே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் உங்களிடத்திலும், நீங்கள் அவரிடத்திலும் மகிமைப் படும் பொருட்டாக, நம்முடைய தேவன் உங்களைத் தமது அழைப்புக்குப் பாத்திரராக்கவும், தமது தயையுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் உங்களிடத்தில் நிறைவேற்றவும் வேண்டுமென்று, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறோம்.”*

*1 யோவா. 2:27*

*“நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களிடத்தில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து, உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமா யிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.”*

*1 யோவா. 2:28*

*“இப்படியிருக்க, பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரிய முள்ளவர்களாயிருக்கும்படி அவரில் நிலைத்திருங்கள்.”*

*1 யோவா. 3:24*

*“அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத் திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்; அவர் நம்மில் நிலைத் திருக்கிறதை அவர் நமக்குத் தந்த ஆவியினாலே அறிந்திருக்கிறோம்.”*

*1 யோவா. 4:13*

*“அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம்.”*

*1 யோவா. 5:20*

*“அன்றியும், நாம் சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்குத் தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ள வருக்குள்ளும் இருக்கிறோம்; இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனு மாயிருக்கிறார்.”*

## *“அவருக்குள்” (1)*

*எபே. 4:15*

*“அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் (அவருக்குள்), நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்.”*

## *"அவருடைய" (9)*

*எபே. 1:7*
*"அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள்*[6] *நமக்கு உண்டாயிருக்கிறது."*

*எபே. 1:11, 12*
*"மேலும் கிறிஸ்துவின்மேல்*[7] *... தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன் குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம்."*

*எபே. 1:13*
*"நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள்*[8] *முத்திரை போடப்பட்டீர்கள்."*

*எபே. 2:21*
*"அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது."*

*எபே. 2:22*
*"அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள்."*

*எபே. 3:12*
*"அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திட நம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது."*

*கொலோ. 1:14*
"[குமாரனாகிய] *அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது."*

*கொலோ. 2:3*
*"அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது."*

*கொலோ. 2:11*
*"அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள்*[9] *பெற்றீர்கள்."*

## *“அவருடைய குமாரனில்” (1)*

*1 யோவா. 5:11*
*“தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம்.”*

## *“அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்குள்” (1)*

*1 யோவா. 5:20*
*“அன்றியும், நாம் சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்குத் தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ள வருக்குள்ளும் இருக்கிறோம்; இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனு மாயிருக்கிறார்.”*

## *“கிறிஸ்துவின் சரீரம்” (3)*

*ரோமர் 7:4*
*“அப்படிப்போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்.”*

*1 கொரி. 10:16*
*“நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?”*

*எபே. 4:12, 13*
*“பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், ... ஏற்படுத்தினார்.”*

## *“கிறிஸ்துவின் சரீரம்” (1)*

*1 கொரி. 12:27*
*“நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயு மிருக்கிறீர்கள்.”*

## *"அவருடைய சரீரம்" (3)*

*எபே. 1:22, 23*

*"எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லா வற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்."*

*எபே. 5:29, 30*

*"தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும் ... இருக்கிறோம்."*

*கொலோ. 1:24*

*"இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷ மடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்."*

## *"சரீரம்" (4)*

*எபே. 3:3*

*"... புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்[10]குள்ளானவர்களுமாய் கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்திற்கு உடன் பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற ... அறிவித்தார்."*

*எபே. 5:23*

*"கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்."*

*கொலோ. 1:18*

*"அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்."*

*கொலோ. 2:18, 19*

*"கணுக்களாலும், கட்டுகளாலும் உதவிபெற்று இணைக்கப்பட்டு, தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீர முழுவதையும் ஆதரிக்கிற தலையைப் பற்றிக் கொள்ளாமல், மாயமான தாழ்மையிலும், தேவதூதர்களுக்குச் "செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, ... எவனும் உங்கள் பந்தயப் பொருளை நீங்கள் இழந்து போகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப் பாருங்கள்."*

## *“ஒரே சரீரம்” (5)*

*ரோமர் 12:5*

*“அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக் கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்.”*

*1 கொரி. 12:13*

*“நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீன ராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக, ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந் தீர்க்கப்பட்டோம்.”*

*எபே. 2:14-16*

*‘‘எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, ... பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்.”*

*எபே. 4:4*

*“உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு.”*

*கொலோ. 3:15*

*“தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர் களாயுமிருங்கள்.”*

---

*குறிப்புகள்*

[1]James S. Stewart, *A Man in Christ* (London: Hodder and Stoughton, 1947), 157. [2]Nestle’s *கிரேக்க வசனத்தில்* “into Christ” *“கிறிஸ்துவுக்குள்” என்றுள்ளது.* [3]Nestle’s *கிரேக்க வசனத்தின்படி இந்தப் பகுதியானது உண்மையில்,* “in the Christ” *“கிறிஸ்துவுக்குள்” என்று கூறுகின்றது.* [4]Nestle’s *கிரேக்க வசனத்தில்,* “in the Christ Jesus” *“கிறிஸ்து இயேசுவுக்குள்” என்றுள்ளது.* [5]Nestle’s *கிரேக்க வசனத்தில்,* “through Jesus” *“இயேசுவின் மூலம்’’ என்றுள்ளது.* [6]NASB*யில் “அவருக்குள்’’ என்றிருப்பினும்,* Nestle’s *கிரேக்க வசனத்தில்* “in whom” *“அவரில்” என்றுள்ளது.* [7]Nestle’s *கிரேக்க வசனத்தில்,* “in whom also ... ” *“அவருக்குள்ளும் ...’’ என்றுள்ளது.* [8]NASB*யில் இவ்வசனத்தில், “அவருக்குள்’’ என்பது இருமுறை இருந்தாலும்,* Nestle’s *கிரேக்க வசனத்தில்* “in whom” *இரு இடங்களிலும் “அவரில்” என்றே உள்ளது.* [9]NASB*யில் ‘‘அவருக்குள்’’ என்றிருப்பினும்,* Nestle’s *கிரேக்க வசனத்தில்* “in whom” *“அவரில்” என்றே உள்ளது.* [10]Nestle’s *கிரேக்க வசனத்தில்,* “joint-body” *“இணைவான சரீரம்” என்றுள்ளது.*